DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.41/2023**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலமுருகன் | Caste: | |
| Father's Name: | இராமகிருஷ்ணன் | Calling: | பைக் மெக்கானிக் |
| Village: | முனியாண்டிபுரம், உரப்புளி | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 30 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.09.2025

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகாவில் உள்ள உரப்புளி கிராமம் முனியாண்டிபுரத்தில் வசித்து வருகிறேன். பைக் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். சாட்சி மோகன்ராஜ் என் அண்ணன். சாட்சிகள் துரை, சுதர்ஷன் நண்பர்கள். ஆஜர் எதிரி அருண்குமாரையும், இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத அரசு பாண்டி மகன் அருண்குமாரையும் தெரியும். 1ம் எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர். 2ம் எதிரி பரமக்குடி சந்தை கடை மருதுபாண்டியர் நகரை சேர்ந்தவர். அவரை ஏற்கனவே நான் பார்த்துள்ளேன். எதிரிகள் இருவரும் மறவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 01.06.2023ம் தேதி மாலை 5.00மணியளவில் பரமக்குடி காக்காத்தோப்பில் உள்ள ஒயின்ஷாப்பில் மது அருந்த சென்றேன். நான் சென்றபோது சாட்சி துரையும் , மருது பாண்டியர் நகரை சேர்ந்த

அருண்குமாரும் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள். நான் துரை அண்ணனை வாங்கண்ணே ஏபி ஷா மஹாலுக்கு சாப்பிட செல்லலாம் என்று கூப்பிட்டேன். அப்போது 2ம் எதிரி அருண்குமார் ஏன்டா பள்ள புண்டை மகனே, நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே நீ ஏன்டா உள்ள வந்து சாப்பிட கூப்பிடுகிறாய் என சொல்லி ரீப்பர் கட்டையை வைத்து என் இடது பக்க தலையில் அடித்துவிட்டார். எனக்கு இரத்தம் வந்தது. என் அண்ணன் மோகன்ராஜ் வந்து சண்டையை விலக்கிவிட்டார். பின்பு மோகன்ராஜும் என் மாப்பிள்ளை சுதர்ஷனும் என்னை பரமக்குடி அரசு மருத்துவமனைக்குஅழைத்து சென்றார்கள். பின்னர் 8.20 மணியளவில் பரமக்குடி தாலுகா போலிசார் வந்து விசாரிக்க நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. அந்த புகார் வாக்குமூலத்தில் எனது அண்ணன் மோகன்ராஜ் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரீப்பர் கட்டையால்தான் 2ம் எதிரி அருண்குமார் என்னை அடித்தார். அந்த ரீப்பர் கட்டை **அ.சா.பொ.1.** இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

இல்லை

Sd/- C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.41/2023**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மோகன்ராஜ் | Caste: | |
| Father's Name: | இராமகிருஷ்ணன் | Calling: | பைக் மெக்கானிக் |
| Village: | முனியாண்டிபுரம், உரப்புளி | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 31 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.09.2025

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகாவில் உள்ள உரப்புளி கிராமம் முனியாண்டிபுரத்தில் வசித்து வருகிறேன். பைக் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். சாட்சி பாலமுருகன் என் தம்பி. சாட்சிகள் துரை, சுதர்ஷன் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரி அருண்குமாரையும், இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத அரசு பாண்டி மகன் அருண்குமாரையும் தெரியும். 1ம் எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் . 2ம் எதிரி பரமக்குடி சந்தை கடை மருதுபாண்டியர் நகரை சேர்ந்தவர். எதிரிகள் இருவரும் மறவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 01.06.2023ம் தேதி மாலை 5.00மணியளவில் பரமக்குடி காக்காத்தோப்பில் உள்ள ஒயின்ஷாப்பில் மது அருந்த சென்றேன். நான் சென்றபோது 2ம் எதிரி அருண்குமார் என் தம்பி பாலமுருகனை ரீப்பர் கட்டையை வைத்து

மண்டையில் அடித்து மண்டை உடைத்துவிட்டார். நான் சண்டையை விலக்கிவிட்டு என் தம்பியை சுதர்ஷனுடன் சேர்ந்து பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அன்று இரவு 8.00 மணியளவில் பரமக்குடி தாலுகா போலிசார் வந்து விசாரித்தார்கள். என் தம்பி புகார் கொடுத்தான். என் தம்பியிடம் படித்துக் காண்பித்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடமும் கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சியாக உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2**. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரீப்பர் கட்டையை வைத்துதான் என் தம்பியை 2ம் எதிரி அடித்தார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)